

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | டிசம்பர் 15, 2022 | புரட்சி 21 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00

# இந்தியாவில் பொருளாதாரக் குவிப்பை நிர்ணயிப்பதே ஜாதிக் கட்டமைப்பு தான்

**முனைவர் கலையரசன்**
**தமிழில் ர. பிரகாசு**

*ஜாதிய சமூகத்தில் சமூக மாற்றத்துக்கான அடிப்படையில் முதன்மையாகக் களையப்பட வேண்டியது ஜாதி அமைப்பு; பொருளாதாரம், அதற்கு துணை சேர்க்கும் காரணி தான் என்பதே பெரியாரியலின் அடிப்படை. ஜாதியைவிட பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சரி செய்து விட்டால் ஜாதியப் பாகுபாடுகள் பலவீனமாகி விடும் என்பது இடதுசாரிகளின் பார்வை. இப்போது சமூகக் கல்வி ரீதியான இடஒதுக்கீட்டில் முதன்மைக் காரணியாகக் கருதப்படும் ஜாதியைப் புறந்தள்ளி பொருளாதாரத்தை அளவுகோலாக மற்றும் முயற்சியே 10 சதவீத உயர்ஜாதி இடஒதுக்கீடு.*

*பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கே ஜாதி அடிப்படையாக இருக்கிறது என்பதை ஆய்வு ரீதியாக நிறுவுகிறார், முனைவர் கலையரசன் - இக்கட்டுரையில்.*

*நாட்டின் சொத்து ஏழை, பணக்காரர் என்ற வர்க்கப் பிரிவில் பகிர்ந்து கிடக்காமல், உயர்ஜாதியினரிடம் அதிகமாகவும், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பிரிவினரிடம் குறைவாகவும் குவிந்திருப்பதைத் தரவுகளுடன் நிறுவுகிறார். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாசகர்களுக்கு ஆழமான இந்தக் கட்டுரையைத் தமிழில் தருகிறோம்.*

இட ஒதுக்கீட்டால் தகுதி, திறமை பாழ்பட்டு விட்டது, நாட்டின் வளர்ச்சியே முடங்கிவிட்டது என ஐம்பது ஆண்டுகளாக கடுமையாக எதிர்த்து வந்த கூட்டத்திற்குப் பொருளாதார அடிப்படையில் 10 விழுக்காடு இடஒதுக்கீட்டைத் தூக்கிக் கொடுத்திருக்கிறது ஒன்றியத்தை ஆளும் பாரதிய ஜனதா அரசு. ஜாதிய அடிப்படையில் சமமற்ற, இந்த அடுக்குமுறை சமுதாயத்தில் அனைவரையும் சமன்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இட ஒதுக்கீடு முறையை ஒழிக்கப் போராடி வந்த பார்ப்பனியக் கூட்டம், அது முடியாமல் போகவே இப்போது அதன் நோக்கத்தை சிதைக்கும் வகையில் பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை அரசியலமைப்புக்குப் புறம்பாக சட்டத்தில் திணித்திருக்கிறது.

கல்வி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கியவர்களுக்கே இட ஒதுக்கீடு என்ற அரசியல் சாசன விதிகளை கணக்கிலோ கருத்திலோ கொள்ளாமல், உயர் ஜாதி ஏழைகளுக்கான 10 விழுக்காடு இட ஒதுக்கீடு செல்லும் என்று நவம்பர் 7ஆம் தேதி உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்துவிட்டது. உயர் ஜாதியிலும் ஏழைகள் இருக்கிறார்கள், அவர்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த 10 விழுக்காடு இட ஒதுக்கீடு உதவும் என்கிறார்கள். ஆனால் இடஒதுக்கீடு வறுமை ஒழிப்புத் திட்டம் அல்ல, அரசியலமைப்புச் சட்டத்திலும் அப்படி எங்கும் கூறவில்லை. 10 விழுக்காடு எந்த அளவு கோலில் வழங்கப்பட்டது? ஆண்டு வருமானமாக ரூ.8 லட்சம் நிர்ணயிக்கப்பட்டது எப்படி? என்றெல்லாம் கேட்க ஆயிரம் கேள்விகள் இருக்கின்றன.

அதையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு அவாள்களின் வாதப்படியே பார்த்தாலும் கூட செல்வம் யாரிடம் எவ்வளவு இருக்க வேண்டும் என்பதையும் இங்கு ஜாதிதான் நிர்ணயிக்கிறது. கடந்த ஆண்டில் வெளியான "அகில இந்திய கடன் மற்றும் முதலீட்டு ஆய்வறிக்கை- 2019" ஜாதி அடிப்படையிலான செல்வ சமத்துவமின்மையைத் தெளிவாக விளக்குகிறது. இதுதொடர்பாக எம்.ஐ.டி.எஸ். துணைப் பேராசிரியர் மற்றும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவன இணை ஆராய்ச்சியாளர் கலையரசன் டிசம்பர் 8ஆம் தேதி "தி இந்து" ஆங்கில நாளேட்டில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதன் உள்ளடக்கம் இதோ.

பொருளாதார அடிப்படையிலான உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டமும், அதை செல்லுபடியாகும் என வழங்கப்பட்டுள்ள தீர்ப்பும் ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு மரபு பற்றிய விவாதத்தைக் கிளப்பியுள்ளன. ஆனால் ஜாதி அடிப்படையிலான ஏற்றத் தாழ்வு சமத்துவமின்மையைப் பற்றி இந்தத் தீர்ப்பு கணக்கில் கொள்ளவே இல்லை.

2020ஆம் ஆண்டில் வெளியான 'அகில இந்திய கடன் மற்றும் முதலீட்டு ஆய்வு'-2019 செல்வ வளத்தில் நிலவும் ஜாதிய சமத்துவமின்மையைத் துல்லியமாக விளக்குகிறது. நிலம், கால்நடைகள், கட்டடங்கள், வேளாண் கருவிகள், வாகனங்கள், வங்கி வைப்புத் தொகை, பிற சொத்துக்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இந்த ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வருமானம் மற்றும் நுகர்வை வைத்து பொருளாதார நிலைகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

1990 முதல் 2020 வரையிலான 30 ஆண்டுகளில் சமத்துவமின்மை அதாவது ஏற்றத் தாழ்வுகளின் இடைவெளி மிக வேகமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக 2000-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த இடைவெளி கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளது. **2019ஆம் ஆண்டில் உயர் ஜாதியினரின் சராசரி சொத்து மதிப்பு 8,03,977 ரூபாயாக இருந்தது. இதர பிற்படுத்தப்பட்ட சாதியினரின் சராசரி சொத்து மதிப்பு 4,09,792 ரூபாயாகவும், பட்டியல் சமூகங்களின் சராசரி சொத்து மதிப்பு 2,28,388 ரூபாயாகவுமே இருந்தது. பழங்குடி மக்களின் சராசரி சொத்து மதிப்பு 2,32,349 ரூபாயாகும். அதாவது உயர் ஜாதியினரின் சொத்து மதிப்பானது பட்டியல் மற்றும் பழங்குடி மக்களைவிட 3 மடங்கு அதிகமாகவும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை விட 2 மடங்கு அதிகமாகவும் இருப்பதை இதன் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.**

நாட்டின் 45 விழுக்காடு சொத்து உயர் ஜாதியினரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. மக்கள் தொகையில் பெரும் எண்ணிக்கையில் இருக்கும் பிற்படுத்தப்பட்டப் பிரிவினரிடம் 40 விழுக்காடு சொத்துக்களும், பட்டியல் சமூகங்களிடம்

(4ஆம் பக்கம்)

## ஒழுக்கமில்லாத 'இந்து'வே வெளியேறு!

"இந்துவாக இருப்பவர் ஒழுக்கவாதி; 'இந்துத்துவா'வை ஏற்றுக் கொண்டவர், பலே பலே ஒழுக்கவாதி" என்று நாம் சொன்னால், அண்ணாமலைக்கு கோபம் வந்து விடும். "யாரடா அப்படி சொன்னது? நீ எந்த ஊடகம்பா? மரியாதையாகப் பேசு; மான நஷ்ட வழக்கு போடுவேன்" என்று பொங்கிடுவார். ஏதோ, கிண்டலுக்காக நாம் எழுதவில்லை. அவரது பேச்சை 'தினமலர்' (டிசம்.12) வெளியிட்டிருப்பதிலிருந்துதான் கூறுகிறோம். அண்ணாமலைக்கு எல்லாவற்றுக்கும் ஆதாரம் வேண்டுமே!

"திராவிட இயக்கங்களில் இருப்பவர்களே அஞ்சி வெட்கப்படும் அளவிற்கு பாலியல் குற்றச்சாட்டுகள் நம்மோடு இருப்பவர்கள் மீது பரபரப்பாக எழுகிறது. ஒழுக்கக் கேடானவர்களுக்கு பா.ஜ.க.வில் இடம் இல்லை. அவர்கள் கட்சியிலிருந்து விலகி விடலாம்" என்று கண்டிப்பாகக் கூறியிருக்கிறார். அதாவது பாலியல் குற்றச்சாட்டிலும் பா.ஜ.க.வை அடிச்சுக்கவே முடியாது; அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்று மகிழ்ச்சியை அல்ல; வேதனையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

என்ன சார் இது – இதெல்லாம் ஒரு பிரச்சினையா... நம்ம இந்து தர்மத்தில் பகவான் கிருஷ்ணன், இந்திரன், சிவன் போன்ற பிரமுகர்கள் வாழ்ந்து காட்டியதைத் தானே நாங்களும் பின்பற்றுகிறோம். இதுல ஒழுக்கக் கேடு எங்கிருந்து வருகிறது? அண்ணாமலை இப்படி எல்லாம் நமது புராணங்களைப் படிக்காமலேயே பேசுவது நமது பகவான்களையே அவமதிப்பது இல்லையா?" என்று கேட்கிறார், ஓர் உண்மையான பா.ஜ.க. இந்து பக்தர். நியாயம் தான்!

ஆனாலும், மக்கள் இதை எல்லாம் வெறுக்க மாட்டார்களா? என்ற நியாயமான கேள்வி எழவும் வாய்ப்புகள் உண்டு. எனவே அண்ணாமலை யாருக்கு அவரது கட்சி நலன் கருதி சில இலவச ஆலோசனைகளை வழங்குகிறோம். ஏற்பதும் புறந்தள்ளுவதும் உங்கள் மத உரிமை!

- பா.ஜ.க.வில் உறுப்பினராவோர் காவல் நிலையத்தில், கிரிமினல் வழக்கு ஏதும் இல்லை என்ற சான்றிதழைக் கொண்டு வர வேண்டும்.
- விபூதி, நாமம், கையில் வண்ண வண்ணக் கயிறுகள் கட்டியிருந்தால் மட்டும் உண்மையான 'இந்து' என்று ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையான இந்து; அசலான பக்தி உணர்வாளர் என்பதைக் கண்டறிய ஏதாவது சோதனைக் கருவி ஒன்றை உலகம் முழுதும் டெண்டர் போட்டு கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும். குறைந்தது நமது அறிவியல் துறை விஞ்ஞானிகளின் உதவிகளையாவது நாடலாம்.
- பா.ஜ.க.வில் எந்த 'கோஷ்டி'யில் இருக்கும் 'இந்து' உண்மையான இந்து என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை அண்ணாமலை தன்னிடமே வைத்துக் கொள்ள வேண்டும். வானதி 'கோஷ்டி' இந்து, 'ராஜா' கோஷ்டி இந்து போன்ற பல்வேறு கோஷ்டி இந்துக்களை ஓரங்கட்டினால் தானே இந்து ஒற்றுமையை வலிமைப் படுத்தி ஆட்சியைப் பிடிக்க முடியும்?
- பா.ஜ.க. மகளிர் பிரிவுக்கு துப்பாக்கி போன்ற தற்காப்பு ஆயுதங்களை வழங்குவதோடு, பா.ஜ.க.வினர், சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதற்கு முழுமையாகத் தடை போட்டு விடவேண்டும்.
- அண்ணாமலை கோஷ்டி இந்துக்களைத் தவிர, மற்ற பா.ஜ.க. குழுக்களின் இந்துக்கள், தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சி இந்துக்களும் இந்துக்களே அல்ல என்று அமீத்ஷா வழியாக நாடாளு மன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வருவது குறித்தும் பரிசீலிக்கலாம். அப்போது தான் கட்சி தூய்மை பெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும்.

இன்னும் ஏராளமான யோசனைகள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்துக்களுக்கான பாரதத்தை பாரத மாதா தலைமையில் உருவாக்கி ஆன்மீகத்தையும் ஒழுக்கத்தையும் காப்பாற்ற இப் போதைக்கு இதுவே போதும் என்பது அடியேன் கருத்து.

இந்த 'குருக்ஷேத்திரத்தில்' அண்ணாமலை 'ஜி' – 'ஜெயம்' பெற அடியேனின் அநேகக் கோடி 'பிரார்த்தனைகள்'; வாழ்க 'காசி புண்ணிய க்ஷேத்திர' தமிழ்; வளர்க பாரத மாதாவின் இந்து ஒற்றுமை! ஒழிக ஒழுக்கமற்ற இந்துக்கள்!

**– கோடங்குடி மாரிமுத்து**

# ஜல்லிக்கட்டு வீரத்தின் அடையாளமா?

கிராமியக் கலாச்சாரம், கிராமியப் பண்பாடு இவைகளிலெல்லாம் புனிதம் கற்பிப்பதோ, பெருமைபடுவதற்கோ ஒன்றும் இல்லை. இவைகளெல்லாம் சாதி கட்டமைப்பில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

மூட நம்பிக்கைகள், சடங்குகள், கிராமத் திருவிழாக்கள், செத்தப் பிணங்களைக் கூட பொது சுடுகாட்டிற்குள் புதைக்க அனுமதி மறுக்கப்படுகின்ற மனிதாபிமானமற்ற கொடுமைகள், சாதி மறுப்புத் திருமணம் செய்தோருக்கு அபராதம் என்றெல்லாம் கிராமியக் கலாச்சாரம் பழமைப் படுகுழிக்குள் மூழ்கிப் போய் கிடக்கின்றது.

அதன் காரணமாகத்தான், கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி நகர்ப்பெயர்வுகள் அதிகமாக இருக்கின்றன.

இந்தியாவிலேயே கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி வருகின்றவர்களின் எண்ணிக்கையில் முதலிடம் பெற்ற மாநிலமாக (63 சதவீதம்) தமிழ்நாடு இருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிருஷ்ணகிரி அருகே தொகரப்பள்ளி என்று ஒரு கிராமம், இந்த கிராமத்தில் காதல் செய்வது என்பதே குற்றம்.

அதிலும் ஒரே சமூகத்தில் காதலித்தால்கூட அது குற்றமாகக் கருதப்பட்டு அபராதம் விதித்து ஊரை விட்டே ஒதுக்கி வைத்து விடுகிறார்கள்.

அண்மையில் தலித் சமூகத்தைச் சேர்ந்த ஆணும், பெண்ணும் திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால் காதலித்தது குற்றம் என்று கூறி அவர்களுக்கு அபராதம் விதித்ததோடு ஊரை விட்டும் ஒதுக்கி வைத்து விட்டார்கள். அவர்கள் வீட்டில் நடைபெறும் நல்லது கெட்டதுகளில் ஊர் மக்கள் யாரும் பங்கேற்பது கிடையாது.

இதே போல் அங்கு ஆறு குடும்பங்கள் விலக்கி வைக்கப் பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இந்த கிராமியக் கலாச்சாரங்களில் ஒன்று தான் தற்போது பெருமையாகப் பேசப்படும் ஜல்லிக்கட்டு என்பதாகும்.

மிருகங்களோடு மனிதர்கள் மோதுவது என்பது இந்த நவீன காலத்திலும் ஏற்புடையது தானா? ஜல்லிக்கட்டிலும் ஜாதி இல்லாமல் இல்லை.

தமிழர் பண்பாடு, தமிழரின் வீரம் என்பது உடலின் வீரத்திலும், உடலின் வலிமையிலும் இருப்பது அல்ல. அது அறிவின் வலிமையிலும், சுயமரியாதையிலும் சக மனிதரை மதிப்பதிலும் தான் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

அதனால் தான் பெரியார், “கிராமங்கள் சூத்திர நிலையிலும், நகரங்கள் பிராமணர்கள் நிலையிலும் இருக்கிறது, கிராமம் என்ற ஒன்றே இருக்கக் கூடாது” என்று துணிவுடன் கூறிய ஒரு தலைவராக இருந்தார்.

அவர் கூறியது எவ்வளவு உண்மை என்பதை நாட்டில் நடக்கும் நிகழ்வுகள் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன.

# G–20 தலைமைப் பதவியால் இந்தியாவுக்கு தனிப் பெருமை ஏதும் இல்லை

G-20 நாடுகளின் தலைமைப் பொறுப்பு இப்போது இந்தியாவிற்கு வந்துள்ளது. இதில் இந்தியா பெருமை கொள்ள எதுவும் இல்லை. இந்த அமைப்பின் உறுப்பு நாடு ஒவ்வொன்றுக்கும் சுழற்சி முறையில் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டு வருகிறது. 19ஆவது சுற்றில் தலைமைப் பதவி மோடிக்கு கிடைத்திருக்கிறது. அந்த முறையில் தற்போது இந்தியாவிற்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதையொட்டி, டெல்லியில் பிரதமர், அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை கூட்டி இந்தியா முழுவதும் 200 இடங்களில் இது தொடர்பான கூட்டங்களை நடத்துவது என்ற முடிவை எடுத்திருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இதில் கலந்து கொண்டிருக்கிறார். மிகவும் பெருந்தன்மையோடு இந்த நிகழ்வுகள் அனைத்திற்கும் தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு தரும் என்று அறிவித்திருக்கிறார். அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒரு ‘Statesman’ என்ற முறையில் தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிற ஒரு சிறப்பான முடிவு.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான சீதாராம் யெச்சூரி கூறியிருக்கிற கருத்தையும் நாம் புறம் தள்ளி விட முடியாது. ‘மோடி ஒரு உலகம், ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் எனும் ஆய்வுப் பொருளை சுற்றி மட்டுமே தன்னுடைய உள்நாட்டு அரசியல் பிரச்சாரத்தை அறிவித்திருக்கிறார். G-20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமை ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதை மேம்படுத்தும் விதத்தில் இருக்கும் என்று ஒன்றிய அரசு அறிவித்து இருக்கிறது. இப்படிப்பட்ட கருத்தை ஒன்றிய அரசு அறிவித்திருக்கிற அதே நேரத்தில், ஒன்றிய அரசாங்கத்தினுடைய கருத்து என்பது அனைவரும் ஒரே குடும்பம், அனைவரும் வசுதைய்வக் குடும்பகம் என்ற கருத்தாக்கத்தைக் கொண்டதாக இருக்கிறது.

இந்த ‘வசுதைய்வக் குடும்பகம்’ என்பது ஒற்றைத் தன்மையைத் திணிப்பதாகும். பன்முகத் தன்மையை மறுக்கின்ற ஒன்றாகும். சமூகப் பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதுதான் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கோட்பாட்டினுடைய அடிப்படை நாதம், அதற்கு மாறாக ஒற்றை ஆட்சி, ஒற்றைக் குடும்பம் என்பது நேர் முரணான ஒரு கருத்தாக்கம். இந்த முரண்பாட்டை மோடி ஆட்சி எப்படி கையாளப்போகிறது ?

குறைந்தபட்சம் G-20 நாடுகளுக்கு இந்தியா தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பதை உலகம் அங்கீகரிக்க வேண்டும் என்ற சொன்னால், இந்த G-20 மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் அனைத்துப் பிரிவினரையும் பன்முகத் தன்மையையும் அங்கீகரிக்கிற ஒரு கொள்கையை மோடி ஆட்சி கைக்கொள்ள வேண்டும்.

ஒற்றை ஆட்சி, ஒற்றைப் பண்பாடு, ஒற்றை மதம், ஒற்றை நாடு, ஒற்றை ரேசன் கார்டு, ஒற்றை கல்விமுறை என்று அனைத்தையும் ஒற்றைத் தன்மை ஆக்குகின்ற சர்வாதிகாரப் போக்கை கை விட்டு, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது தான் பன்முகத் தன்மையை அங்கீகரிக்கிற முறை என்பதை மோடி புரிந்து கொண்டு செயல்பட்டால் இந்த மாநாட்டிற்கு மட்டுமல்ல; அவருக்கும் பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

# அயோத்தி ‘ராமன்’ மீது சூரிய ஒளி விழுவது எப்படி?

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் இராமன் கோவில் உண்மையிலேயே இராமன் பிறந்த இடம் தான். இராமன் பிறந்த இடத்தில் தான் கோவில் கட்டியிருக்கிறோம். இராமன் தான் அங்கு பட்டாவோடு குடியிருக்கிறான் என்பதை மக்களிடம் நம்ப வைப்பதில் ஒன்றிய ஆட்சி தீவிரமாக இறங்கியிருக்கிறது. இராம நவமி அன்று இராமர் சிலை மீது ராமநவமி நாளன்று சூரியக் கதிர்கள் விழப் போகிறது என்ற ஒரு செய்தியைப் பரப்பி வருகிறார்கள். அப்படி சூரியக் கதிர்களை விழும்படி செய்வதற்காக செயற்கையான கருவி ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆடிகள் என்று சொல்லப்படுகின்ற லென்சுகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்ற அந்தக் கருவியை வடிவமைக்கும் முயற்சியில் மத்திய ஆராய்ச்சி நிறுவனமும், மத்திய கட்டிட ஆராய்ச்சி மய்யமும் இணைந்து செயல்பட வேண்டும் என்று ஒன்றிய ஆட்சி கட்டாயப்படுத்தியுள்ளது.

இதற்கான அறிவியல் தகவல்களை அளிப்பதற்காக இந்திய வானியல் நிறுவனமும், அயுக்கா என்ற வானியல் நிறுவனமும் ஈடுபட வேண்டும் என்றும் ஒன்றிய ஆட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. இப்படி சிலைகளின் மீது சூரிய ஒளி விழுவது என்பது கடவுள் சக்தியோ, அபூர்வ சக்தியோ அல்ல. அது ஒரு கட்டிடக்கலை. பல கோவில்கள் இப்படி ஒளி விழும்படி கடந்த காலங்களில் கட்டப்பட்டிருக்கிறது. அதன்படி சூரிய ஒளியும் விழுந்து கொண்டு தான் இருக்கிறது. அதை வைத்து மக்களிடம், கடவுளுக்கு ஒரு சக்தி இருக்கிறது என்று அறிவியலுக்கு எதிரான கருத்துக்களை நம்ப வைக்கிற முயற்சியில் ஆன்மிகவாதிகள் என்று கூறிக்கொள்கிற போலி அறிவியல்வாதிகள் உருவாக்கிக்கொண்டு வருகிறார்கள்.

ஒரு குறிப்பிட நேரத்தில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில் சூரிய ஒளி எந்த கோணத்தில் விழும் என்பதை கணக்கில் கொண்டு மேற்கூரையில் துளை செய்தால் சூரிய ஒளி அந்த சிலையின் மீது விழுந்துவிடும். இது தான் அதில் அடங்கியிருக்கும் விஞ்ஞானம். உத்ராயணம், தட்சணாயனம் என்ற சூரிய உதயத்தோடு தொடர்புள்ள நிகழ்ச்சி இது. இதே போல்தான் சபரிமலையிலும் மகர ஜோதி என்ற ஒரு ஜோதி தரிசனம், மோசடியாக அரங்கேற்றப்பட்டு வருகிறது. அய்யப்பன் ஜோதியாக தோற்றமளிக்கிறான் என்று பக்தர்கள் கூடி அந்த மகர ஜோதியை வணங்குகிறார்கள். உண்மையில் இரண்டு மலைகளுக்கு இடையே ஏராளமான கற்பூரங்களைப் போட்டு எரித்து அப்படி ஒரு ஜோதியை உருவாக்குகிற முயற்சியில் கேரளாவைச் சேர்ந்த மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்கள் காலம் காலமாக ஈடுபட்டு வருகிறார்கள். இது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட உண்மை.

அறிவியலை வைத்து மூட நம்பிக்கையையும், கடவுள் நம்பிக்கையையும் பரப்புவது தான் இந்த நாட்டின் ஆன்மிகமாக மாறிப்போய் இருக்கிறது. அதை ஒன்றிய ஆட்சியே செய்து கொண்டிருப்பது என்பது வெட்கக் கேடான ஒன்று.

# சேலம் சங்கரமடத்தைத் தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் கழகத் தோழர்கள் விடுதலை

2018ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சி எச்.ராஜா திரிபுராவில் லெனின் சிலையை உடைத்தது போல் தமிழ்நாட்டில் உள்ள பெரியார் சிலை உடைக்கப்படும் என அவர் டிவிட்டர் கணக்கில் பதிவிட்டிருந்தார்.

அச்சமயம் சேலம் மரவனேரியில் உள்ள சங்கரமடம் கல்வீசி தாக்கப்பட்டது. முன் விளக்குகள் உடைக்கப்பட்டன அங்கு இருந்த ஜெயேந்திரன் பதாகை கிழித்து எறியப்பட்டது.

எச்.ராஜாவின் பேச்சுக்கு எதிர்வினையாக கழகத் தோழர்கள் கோ. இராஜேந்திரன், த. மனோஜ்குமார் மற்றும் பொ. கிருஷ்ணன் ஆகியோர் இந்தத் தாக்குதலை நடத்தியாகக் கூறி 21.03.2018 அன்று அஸ்தம்பட்டி காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து தோழர்களைக் கைது செய்தனர்.

2018இல் இருந்து 4 ஆண்டுகள் நடந்த அவ்வழக்கில் 02.12.22 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.கழகத் தோழர்கள் அவ்வழக்கில் இருந்து குற்றமற்றவர்கள் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட தோழர்கள் சேலம் பெரியார் சிலைக்கு மாலை அணித்து மரியாதை செலுத்தினர்.

இந்த வழக்கில் திறம்பட வாதாடிய வழக்கறிஞர் சந்தியூர் பார்த்திபனுக்கும் திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாவட்டச் செயலாளர் இரா.டேவிட்டுக்கும் தோழர்கள் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார்கள்.

### ‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’ நூல் வெளியீட்டு விழாவில் அஜிதா கேள்வி

# ‘இந்து தேசிய இனம்’ என்று ஒன்று இருக்கிறதா?

*கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில், மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு 19.11.2022 அன்று மாலை 6 மணியளவில், தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம்’ நூல் மறு பதிப்பு செய்து வெளியிடப்பட்டது. வழக்கறிஞர் அஜிதா, நூலை திறனாய்வு செய்து உரையாற்றினார்.* (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கோல்வாக்கர் என்று சொல்லக்கூடிய, ஆர்.எஸ்.எஸ்.சுக்கு 33 ஆண்டுகள் தலைவராக இருந்த அவர் எழுதிய புத்தகம், ‘Bunch of thoughts’ இது ஆர்.எஸ்.எஸ்.இன் வேத நூலாக கருதப்படுகின்றது. இதை வேத நூல் என்று ஏன் சொல்கிறோம் என்றால், அதற்கு வெளியிலும், முன்னாலும், பின்னாலும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் ஏன் என்று கேள்வி கேட்க மாட்டார்கள். அதில் உள்ளவற்றை மட்டுமே அதற்காக மட்டுமே அவர்கள் பயிற்றுவிக்கப் பட்டவர்கள்.

நான் 35 ஆண்டுகளுக்கு முன்னால் சட்டக் கல்லூரியில் பயின்ற போது புரட்சிகர மாணவர் இயக்கம், அங்கே இருக்கக்கூடிய பெரியார், அம்பேத்கர் சிந்தனைகள் கொண்ட இயக்கங்கள், மார்க்ஸிய, லெனினிய இயக்கங்கள் மாணவர் அமைப்புகளாய் இருப்பார்கள். முதன்முதலாக அங்கு ஏபிவிபி என்ற அமைப்பு சட்டக்கல்லூரிக்கு வருகிறது. எங்களுக்கு போராட்டங்கள் மற்றும் மற்ற நேரங்களைத் தவிர இவர்களோடு வாக்குவாதமும், பேச்சும், கருத்து வேறுபாடுகளும் வந்து கொண்டே இருக்கும். அப்போது, ஆர்எஸ்எஸ் என்றால் எந்த தேசிய இனம், நீங்கள் இந்தியாவை எந்த தேசிய இனமாக கருதுவீர்கள் ? என்று நான் கேட்கிறேன். அவர்கள் சொல்கிறார்கள், ‘இல்லை இல்லை இந்தியா முழுவதும் ஒரே தேசிய இனம்’ என்றார்கள். அப்பொழுது நான் மீண்டும் கேட்டேன், நீங்கள் சமூகவியல் படித்தீர்கள் என்றால் ஒரு தேசிய இனம் என்றால் அவர்களுக்கென்று ஒரு மொழி, அவர்களுக்கான வரையறுக்கப்பட்ட எல்லை, அவர்களுக்கான பொது கலாச்சாரம் என்பதாக இருக்க வேண்டும். இப்படி இருக்கும் போது இந்தியாவில் இத்தனை விதமான மக்கள் இருக்கும் போது எப்படி ஒரே தேசிய இனமாக இருக்க முடியும்? என்று கேட்டேன், அதற்கு, ‘இல்லை இல்லை அது கலாச்சார தேசிய இனம், இந்து கலாச்சாரம். கலாச்சாரம் ஒன்றாக இருந்தால் அதுதான் தேசிய இனம்’ என்றார்கள். இப்படி எங்குமே சொல்லவில்லையே? அய்.நா சபையில் கூட ஒப்புக் கொள்ளவில்லையே நீங்கள் எங்கிருந்து சொல்கிறீர்கள்? இப்படியே வாக்குவாதம் செல்லும், நான் நாளைக்கு வந்து பேசுகிறேன் என்று சொல்வார்கள். அடுத்த நாள் நாம் கேட்டால், அதற்கு அடுத்த நாள் என்று கூறுவார்கள். இப்படி தொடர்ச்சியாக சரியான பதிலைக் கொடுக்காமல் செல்வார்கள். அப்படி நான் விவாதித்தவர்களில் ஒருவர் தான் வானதி சீனிவாசன். அன்றைக்கு அவரும் நானும் இருப்போம். ஏன் இதை இப்போது கூறுகிறேன் என்றால் இந்த புத்தகத்தை படிக்கும் போது தான் தெரிகிறது. ஆதியும் அந்தமும் இல்லாமல் அதற்கான எந்தவித அடிப்படையும் இல்லாமல் சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு இருப்பார்கள். எப்பொழுது அந்த விவாதம் முடிவுக்கு வரும் போதும் இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம் நான் படித்து விட்டு வருகிறேன், புத்தகத்தை சொல்கிறேன், எப்படி கம்யூனிஸ்ட் தலைவர்களெல்லாம் இதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள் என்றெல்லாம்கூட பேசுவார்கள். அப்படி இவர்கள் பொய் சொல்வதிலே வல்லவர்கள். இன்றைக்கு இந்தப் புத்தகத்தைப் படிக்கும் போது தான் தெரிகிறது. கோல்வாக்கரின் சிந்தனை கொத்து என்கிற Bunch of Thoughts என்கிற புத்தகம் தவிர வேறெதையுமே அவர்கள் பேசுவதில்லை. “இந்து



தேசிய இனத்துக்கு தொடக்கமும் இல்லை; முடிவும் இல்லை. நாம் அனாதிகள்; நாம் மண்ணின் மைந்தர்கள்; ஆனால் நமக்கு அடையாளமே வேண்டாம்; பெயரே இல்லாதவர்கள்” என்கிறார் ஹெட்கேவர். இதை உளறல்கள் என்று ஏன் சொல்கிறோமென்றால், இந்த புத்தகத்தில் சமூக விஞ்ஞான அடிப்படை இல்லை, கோபத்திலோ, ஆத்திரத்திலோ இப்படி நாம் பேசவில்லை.

இன்னும் ஒன்றை நாம் பார்த்தோமென்றால் ஹிட்லரின் நாஜி கருத்துக்களும் இவர்களுடைய கருத்தும் ஒத்துப் போகிறது. இஸ்ரேலில் அவர்கள் ஆட்சியை அமைத்து நாட்டைப் பிடித்தப் பின்னால் இங்கே இருக்கக் கூடியவர்கள் மிகத் தெளிவாக எழுதுகிறார்கள், ‘இப்பொழுது நமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது ஏனென்றால் ஆரிய இனத்தின், ஆரிய மதத்தின் மேன்மையைக் கொண்டு போராடி அவர்கள் நாட்டை அமைத்துக் கொள்வார்கள் என்றால் இந்துக்களுக்கும் ஒரு நாடு உருவாகும் என்பதில் நமக்கு எந்தவித அய்யமுமில்லை’ என்று இஸ்ரேல் உருவான பின்பு இவர்கள் சொன்னார்கள். பாலஸ்தீனத்தில் இருந்து அவர்களுடன் போராடி அந்த நாட்டின் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டதை நியாயப் படுத்தினார்கள்.

- *தனது ஆரிய இனத்துக்கு தொடக்கமும் இல்லை; முடிவும் இல்லை என்கிறார் ஹெட்கேவர்.*
- *காந்தி கொலை செய்வதற்கு 15 நாட்களுக்கு முன்பு ஒரு கொலை முயற்சியை நடத்தி தோல்வி கண்டது கோட்சே கும்பல்.*
- *பிரிட்டிஷார் வெளியேறும் முன்பு ஆட்சி அதிகாரத்தைத் தங்களிடம் வழங்குவார்கள் என்று நம்பியது ஆர்.எஸ்.எஸ்.*

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னால் வெளியுறவுத் துறை அமைச்சருக்கு குரு கோல்வாக்கர் ஒரு கடிதம் எழுதுகிறார், ‘நீங்கள் நேபாளத்தின் மீது மிக அதிகமான இணக்கமாக இருக்க வேண்டும், அது இந்து நாடு அதற்காக நீங்கள் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்’ இதிலிருந்து, இந்து என்பதற்கு சமூகவியல் அடிப்படையில் எந்தவித ஆதாரமும் இல்லை என்பது நமக்கு தெரிகிறது.

மருத்துவர் தாயப்பன் அவர்கள் சொன்னார் தங்களுடைய நிர்வாகத்திற்காக பிரிட்டிஷ் அரசு எல்லோரையும் இந்து என்ற வார்த்தையில் குறிப்பிட்டனர், அதைப் பயன்படுத்திக் கொண்டு இவர்களும் அதைத் தொடர்ச்சியாக பேசிக் கொண்டு வருகிறார்கள். அதற்குப் பின்னால் காந்தியாரை கொலை செய்தது மட்டுமல்லாமல் பல்வேறு தலைவர்களை இவர்கள் கொலை செய்ய பல முயற்சி செய்தார்கள். அந்த ஒரு முயற்சியில் தான் காமராஜர் டெல்லியில் இருந்த போது அவரது வீட்டைக் கொளுத்த முயற்சித்தார்கள். அதைப் பற்றி அங்கிருந்த காவல்துறை தலைமை அதிகாரியே சொல்லி யிருக்கிறார். “இந்தக் கூட்டம் பல இடங்களை அடித்து உதைத்து விட்டு கொளுத்துவதற்காக போனது, அதையும் தாண்டி காமராஜர் தங்கியிருந்த வீட்டிற்கும் போய் அவரை வீட்டுடன் கொளுத்துவதற்கும் முயற்சி செய்தனர், அங்கிருந்த அதிகாரி அதைத் தடுத்த போது அவரைக் கீழே தள்ளி அடித்து உதைத்து விட்டு உள்ளே சென்று ஒவ்வொரு அறையாக தட்டி திறந்து பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விட்டார்கள். அதன் பின்பு ஜந்தர் மந்தருக்கு சென்றார்கள்” என்கிறார் அந்த அதிகாரி. அன்று காமராஜர் நல்வாய்ப்பாக உயிர் தப்பினார். அன்றைக்கு உத்தரபிரதேச முதல்வராக இருந்தவர் ராம் நரேஷ் யாதவ், அவரையும் கொலை செய்யத் திட்டம் தீட்டியிருந்தார்கள். அதற்கு முன்னால் பீகாரில், எளிமையான பின்னணியில் முடிதிருத்தும் சமுதாயத்தில் இருந்து வந்த கர்ப்பூரி தாகூர் முதல்வரான போது அவரை கொலை செய்ய முயற்சி செய்து கொலை வழக்கெல்லாம் பதிவு செய்யப்பட்டது. இவர்களுக்கு யார் பிடிக்கவில்லையோ அல்லது தங்களது கருத்துக்கு ஆணித்தரமாக எதிர் கருத்து வைக்கிறார்களோ அவர்களை கொலை செய்தே வருகின்றனர். இவை அனைத்துமே இந்த நூல் பதிவு செய்திருக்கிறது. குறிப்பாக காந்தியைத் தீர்த்துக் கட்ட 1948 ஜனவரி 19 ஒரு முயற்சி செய்கிறார்கள். ஜனவரி 30 அன்று அதை முடித்தும் விட்டார்கள். ஏன் அவ்வாறு செய்தார்களென்றால், ஒரே காரணம் தான். காந்தியார், இந்து, முஸ்லிம் ஒற்றுமையைப் பேசுகிறார். அதன் காரணமாகத்தான் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து விட்டது என்ற காரணத்தைக் கூறினார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.அய் சேர்ந்த நாதுராம் கோட்சே காந்தியை கொலை செய்யவில்லை என்று இவர்கள் கூறும் பொய்யை நாம் எப்படி முறியடிக்க வேண்டுமென்றால், நாதுராம் கோட்சேவின் சகோதரர் கோபால் கோட்சே, நாதுராம் கோட்சேவின் அஸ்தியின் ஒரு பகுதியை கரைக்காமல் வீட்டிலேயே வைத்துக் கொண்டார். அது கரைக்கும் நாள் என்பது, ‘இந்து இராஷ்டிரம் உருவான பின் தான் வரும்’ என்று ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 15ஆம் தேதியன்று கோட்சே தூக்கிலிடப்பட்ட நாளை அவர்கள் வணங்கும் ஒரு நாளாக வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த அஸ்தியை, காவிக் கொடியை வைத்து வணங்கக் கூடிய அந்த நாளில் ஒரு வரைபடமும் வைத்திருக்கிறார்கள், அது இந்தியா சுதந்திரம் அடைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகும் பாகிஸ்தான் சேர்த்து ஒரு வரைபடம். எனவே இவர்களின் அகண்ட பாரதம் என்ற கனவிற்கு யாரெல்லாம் எதிராக இருக்கிறார்களோ அவர்களைக் கொலை செய்யவே நினைத்தார்கள். நேருவாகட்டும் மற்ற காங்கிரசார்களையும், ராஜ்நாராயணன் இன்னும் ஜனநாயகத்தைப் பேசக்கூடியவர்களை இவர்கள் எப்படி கையாண்டிருப்பார்கள் என்று நாம் கூறத் தேவையில்லை.

குரு பூர்ணிமா அன்று ஆர்.எஸ்.எஸ் காரர்கள் ஒரு பெட்டியை வைத்து விடுவார்கள் அதில் பணத்தை போட்டுவிட வேண்டும். இது 1925ஆம் ஆண்டு முதலே நடைபெற்று வருகிறது.

பிரிட்டிஷாரிடம் ஏன் இவர்கள் இணக்கமாக இருந்தார்கள் என்றால், பிரிட்டிஷார் செல்லும் போது இந்த ஆரிய பார்ப்பனர்களிடம் ஆட்சியைக் கொடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. இரண்டாம் உலகப் போர் வந்த போது பார்ப்பனர்கள் அனைவரும் ஜெர்மன் படித்தார்கள். ஏனென்றால் ஜெர்மன் கை தான் ஓங்கியிருந்தது. அதிகாரத் திற்காகவும், பார்ப்பனர்களின் மேன்மைக்காகவும் எத்தனை கோடி மக்களையும் பலி கொடுக்க இவர்கள் தயங்க மாட்டார்கள். இப்படி ஏராளமான வரலாற்றுத் தகவல்களைக் கொண்ட இந்த நூலை 1982ஆம் ஆண்டிலேயே எழுதியிருக்கிறார் விடுதலை இராசேந்திரன்.

இதை நாம் மக்களுக்கு பரப்ப வேண்டும். இந்த புத்தகத்தை வாசிப்பதும், இந்த புத்தகத்தை இன்னும் சிறு சிறு புத்தகமாகக் கொண்டு வருவதும் காலத்தின் தேவை என்றார் வழக்கறிஞர் அஜிதா.

(முற்றும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அம்பேத்கர் நினைவு நாள்: கழக சார்பில் சிலைகளுக்கு மாலை

அம்பேத்கர் நினைவுநாளையொட்டி கழக சார்பில் பல்வேறு இடங்களில் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

**சென்னை :** புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளை ஒட்டி, மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் அடையாறு அம்பேத்கர் மணிமண்டபத்தில் காலை 9:30 மணியளவில், இரண்யா கொள்கை முழக்கங்களை எழுப்பி மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டம் பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு, கிருத்திகா மாலை அணிவித்தார். இறுதியாக, இராயப்பேட்டை வி.எம். தெரு படிப்பகத்தில் வைக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் மாலை அணிவித்தார்.

தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள், பகுதி கழகப் பொறுப்பாளர்கள் உட்பட கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

**விழுப்புரம் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் டாக்டர் அம்பேத்கர் 66ஆவது நினைவு நாளையொட்டி விழுப்புரம் அரசு மருத்துவமனை எதிரில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அனிவித்து கொள்கை முழக்கம் உறுதியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது .

நிகழ்ச்சியில் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார், விழுப்புரம் மாவட்ட கழகத் தலைவர் பூ.ஆ.இளையரசன், இளைஞரணி செயலாளர், கிருஷ்ணராஜ், பெரியார் ஜெயரட்சகன், தமிழரசன், ஜெயபாலன் அய்யா, வித்யாசேகர், விஷ்வா, கலைமணி ஆகியோர் கலந்துகொண்டனர்

தொடர்ந்து ஆதிதிராவிடர் முன்னேற்றக் கழகம் சார்பில் டாக்டர் அம்பேத்கர் நினைவுநாள் நலத்திட்ட நிகழ்ச்சியை மாவட்டத் தலைவர் ஜெய்பீம் கமல் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் கழக சார்பில் கலந்து கொள்ள ஜெய்பீம் கமல் அழைத்தார். விழுப்புரம் சிக்னல் அருகில் நடந்த நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் முன்னேற்றக் கழகத் தலைவர் பாலு, வழக்கறிஞர் லூசியா, ஆகியோர் உரைக்கு பின், திராவிடர் விடுதலைக் கழக விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ.இளையரசன் கலந்து கொண்டு ஜாதியை தீண்டாமையை பாதுகாக்கும் இந்து மதம் பார்ப்பனியத்தின் கொடுமைகளைக் குறித்தும் மக்கள் சபரிமலைக்கும் திருப்பதி கோயிலுக்கும் உழைத்த பணத்தை இங்கிருந்து கொண்டுபோய் கோடி கணக்கில் உண்டியலில் போட்டு வருகிறார்கள். மோடி அரசின் விலைவாசி உயர்வை பற்றி கவலைபடாமல் உழைத்த பணத்தை கோயிலுக்கு செலவு செய்து வருகிறார்கள்

தலைவர் அம்பேத்கர் கோயிலுக்காக பணத்தை செலவு செய்யாதீர்கள் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கு செலவிடுங்கள் என்று சொன்னார் இதுகுறித்து மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடி ஜாதி ஒழிந்த சமத்துவ விடுதலைக்கு உழைத்த தலைவர்கள் தந்தை பெரியார் டாக்டர் அம்பேத்கர் விட்டு சென்ற கொள்கை பணியை மக்களிடத்தில் கொண்டு செல்வோம் என்று உரையாற்றினார் கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு ஆர்முடன் கருத்துகளை கேட்டனர்.

**கோவை :** காந்திபுரம் பெரியார் சிலை அருகில் கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் படத்திற்கு தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், கோவை மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன் உரையாற்றினார்கள்.

தோழர்கள் இராமச்சந்திரன், பன்னீர்செல்வம், நிர்மல் குமார், கிருஷ்ணன், வெங்கட், இயல், சிவராசு, மாதவன், துளசி, ஸ்டாலின் ராஜா, இராஜாமணி, சக்கரவர்த்தி, பொன்மணி, மனோகர், முத்தமிழ் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் தோழர் சிவராசு அவர்கள் தேநீர் வழங்கினார் . தோழருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கள்ளக்குறிச்சி :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு, தே.ச அன்புரவி சங்கராபும் ஒன்றிய செயலாளர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இதில், சி.சாமிதுரை மாவட்ட அமைப்பாளர், மு.நாகராஜ் மாவட்டத் துணைச் செயலாளர், வீ. முருகன் அறிவியல் மன்ற அமைப்பாளர், இரா கார்மேகம் ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர், மா.குமார் ரிஷிவந்திய ஒன்றியத் தலைவர், பிரபு, ரா வீரமணி, கு.பாபா, ரா. ஜீவா, மு. சாபா, கா.மணிகண்டன், மே. சுபாஷ் , ஏ.தினேஷ், அ. கவியரசு ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை:** அம்பேத்கரின் 66ஆவது நினைவு நாளில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் நாராயணக் குப்பத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு ரா. வீரமணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இதில் சி. சாமிதுரை மாவட்ட அமைப்பாளர், மு. நாகராஜ் மாவட்டத் துணைச் செயலாளர், இரா கார்மேகம் ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர், சு. சிவகுமார், ரா. ரமேஷ், பா. ஜோதிபாஸ், நா.முருகன், சுரேஷ், ரா.வினோத், ரா. வானவராயன், பிரபு, கு. பாபா, ரா. ஜீவா, மூ. சபா, ஏ. தினேஷ், விக்ரம், அ.கவியரசு ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

10 விழுக்காடு சொத்துக்களும், பழங்குடி மக்களிடம் 5 விழுக்காடு சொத்துக்களும் மட்டுமே உள்ளன.

இந்த செல்வ இடைவெளி என்பது திடீரென முளைத்தது அல்ல. வரலாற்றில் பரம்பரை பரம்பரையாக நீண்டு வருகிறது. குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்தே நிலம் அனைத்து குழுக்கள் இடத்திலும் சமமாக இல்லை. காலனிய ஆட்சிக் காலத்தில் நில உரிமை குறிப்பிட்ட சில ஜாதிகளின் கைகளுக்குக் கிட்டியது. காலனிய ஆட்சிக்குப் பிந்தைய காலத்தில் அது மேலும் விரிவடைந்தது. இந்தியாவின் நில சீர்திருத்த நடவடிக்கைகள் அந்த பாரம்பரியத்தை உடைக்கவில்லை. 1990-களில் ரியல் எஸ்டேட் துறை அபரிதமாக வளர்ந்தபோது நிலங்கள் மற்றும் கட்டடங்களின் மதிப்புகள் பன்மடங்கு அதிகரித்தன. இதனால் 1980-களில் நாட்டின் மொத்த சொத்து மதிப்பில் தனியாரின் விகிதம் 290 விழுக்காடாக இருந்தது 2020ஆம் ஆண்டில் அது 555 விழுக்காடாக உயர்ந்தது. இது உலகிலேயே மிக அதிகம் என்று உலக சமத்துவமின்மை அறிக்கை-2022 கூறுகிறது. செல்வம் மற்றும் பரம்பரைச் சொத்துக்களுக்கு இந்தியாவில் வரி இல்லை என்பதால் இதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

இத்தகைய ஆழமான சொத்துடைமைகளில் ஜாதி அடிப்படையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை செல்வச் சமத்துவமின்மை நிலவும் இந்தச் சூழலில் நமக்கான பொதுக் கொள்கையை எப்படி உருவாக்குவது? ஜாதி-நடுநிலைக் (Caste - neutral ஜாதி நடுநிலை என்பது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஜாதியினரைப் போல உயர்ஜாதியினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று உயரத்தையும், பள்ளத்தையும் சமப்படுத்தும் வாதம்) கொள்கையால் இந்த செல்வ இடைவெளியை தடுக்க முடியுமா? அதற்காக வாதாடுபவர்கள் சமத்துவமின்மையைக் கவனக் குறைவாக நியாயப்படுத்துகிறார்கள். இந்தியாவில் ஜாதி அடிப்படையிலான சமத்துவமின்மையை நிவர்த்தி செய்வதற்கான ஒற்றைக் கொள்கை கருவியாக இட ஒதுக்கீடு மட்டுமே உள்ளது. எனினும் இதனால் கல்வி, வேலை, மேம்பட்ட வருவாய் ஈட்டுதலில் இதன்மூலம் அடைந்த பலன்கள் இன்னமும் அடக்கமான அளவுக்குள் கட்டுப் பாட்டுக்குள் தான் இருக்கிறது. சமத்துவமின்மை கட்டமைப்பைத் தகர்த்திட இது போதுமானதாக இல்லை.

ஜாதி அடிப்படையிலான செல்வ இடைவெளி கல்வி, வேலை, வருமானம் ஆகியவற்றில் மட்டும் இல்லை. ஒரு தலைமுறையிடம் இருந்து மற்றொரு தலைமுறைக்கும் ஜாதி அடிப்படையிலான செல்வ இடைவெளி கடத்தப்படுகிறது. கல்வியில் மேம்படுவதும், வேலைவாய்ப்பைப் பெறுவதும் மட்டுமே இந்த இடைவெளியை போக்கிவிடாது. அதற்காக **தற்போது நடைமுறையில் இருக்கும் ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு முறையைத் திருத்தி, பொருளாதார அடிப்படை யிலான இட ஒதுக்கீட்டை நுழைத்துவிட்டால் ஏற்கெனவே அடைந்துள்ள குறைவான வளர்ச்சியும் தலைகீழாய் மாறிவிடும். சமத்துவ மின்மை மேலும் பன்மடங்கு பெருகிவிடும்.**

சமூகப் படிநிலையில் கீழே இருப்பவர்களை மேலே உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது, ஏற்கெனவே மேலே இருப்பவர்கள் அதனால் தங்கள் அந்தஸ்தை இழப்பதை விரும்பாத போக்கு இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே இருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவில் கருப்பினத்தவர்களின் மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்ட உறுதி மிக்க நடவடிக்கைகள் வெள்ளைக்காரர்களின் எதிர்ப்பை சம்பாதித்தது. அதைப்போலவே இந்தியாவிலும் இட ஒதுக்கீடு எதிர்ப்பு உச்சத்தை அடைந்து, அதன் காரணமாக உருவானதே உயர்ஜாதி ஏழைகளுக்கான இடஒதுக்கீடு.

வரலாற்றில் பன்னெடுங் காலமாக நீடித்து வரும் ஜாதி மற்றும் இனப் பாகுபாடுகள்தான் சமத்துவத்தை சீர்குலைக்கும் இரட்டை நிறுவனங்களாக உள்ளன. ஜாதியப் பாகுபாடும் நிற அடிப்படையிலான இனப் பாகுபாடும் ஒன்றுக்கொன்று மரபு ரீதியாக ஒப்பிட இயலாதவை என்றாலும், நிற அடிப்படையிலான எதிர்ப்பு அரசியலுக்கும், இந்தியாவில் **ஜாதிய- நடுநிலை** கொள்கை சார்ந்த விவாதமும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளை கொண்டுள்ளன. அமெரிக்காவில் கருப்பின மக்களின் மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டு வந்த உறுதிமிக்க நடவடிக்கைகளை டொனால்டு டிரம்ப் ஆட்சிக் காலத்தில் நிறுத்திவைக்க முயற்சி நடந்தது. ஆனால் பைடன் தலைமையிலான புதிய அரசாங்கம் அதற்கு முயற்சிக்கவில்லை.

எந்தவொரு சமூகத்திலும் சமத்துவமின்மை அளவு அரசியல் தேர்வை பொறுத்தே இருக்கிறது. “செல்வம் அதாவது சொத்து பரவலாக்கப்படும் வரலாறுகள் எப்போதுமே ஆழமான அரசியலோடு சார்ந்தது” என்கிறார் பொருளாதார அறிஞர் தாமஸ் பிக்கெட்டி. கடந்த 2 நூற்றாண்டுகளின் செல்வ விநியோக நிலைகளை விரிவாக அலசி அவர் இதனைக் கூறுகிறார். ஒரு நியாயமான சமூகத்தை உருவாக்க சமமான களம் அவசியமானதாக இருக்கிறது - சமதளத்தில்.

## செல்போன் எதற்கு?

- அம்பேத்கர் சிலைக்கு விபூதி அடிக்கும் இந்து முன்னணி கும்பல் தைரியம் இருந்தால் தங்கள் சொந்த மதமான இந்து மதத்தைச் சார்ந்த பெருமாள் சிலைகளுக்கு விபூதி அடிக்குமா? அய்யங்கார்கள் கூட்டம் வாலை ஒட்ட நறுக்கி விடும்!
- கோயில்களில் செல்போன் கொண்டுவர உயர்நீதிமன்றம் தடை விதித்திருப்பதுகூட ஒரு வகையில் நியாயம்தான் சமஸ்கிருத மந்திரங்களை கருவறையில் உள்ள கடவுள்கள் நெட்வொர்க் இல்லாமலே புரிந்து கொள்ளும் போது வீணாக எதற்கு செல்போன்?
- ஆகமக் கோயில்களைக் கணக்கெடுக்க அறநிலையத் துறைக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது நீதிமன்றம். ஓய்வுபெற்ற நீதிபதி குழுதான் கணக்கெடுக்க வேண்டும் என்று ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டதை மீறக்கூடாதாம். சரி, ஆகமக்கோயில் சிலை திருட்டையும். ஓய்வு பெற்ற நீதிபதிதான் கண்டு பிடிக்க வேண்டுமா ?

**– விடுதலை இராசேந்திரன்**
**டுவிட்டரிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th December 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN